වාර්ෂික වාර්තාව හා ගිණුම් ප්‍රකාශනය
ஆண்டறிக்கையும் கணக்குக் கூற்றும்
ANNUAL REPORT & STATEMENT OF ACCOUNTS

2018

ජාතික මෝස්තර මධ්‍යස්ථානය
தேசிய வடிவமைப்பு நிலையம்
National Design Centre

உள்ளடக்கம்

வழிகாட்டும் கோட்பாடுகள்	01
• நோக்கு • செயற்பணி	
நிறுவன ரீதியான நோக்கங்களும், பெறுமானங்களும்	03
நிறுவனச் சட்டமும், பதிவும்	04
நிறுவன முகாமைத்துவம்	05
சிரேஷ்ட முகாமைத்துவம்	06
தலைவரின் செய்தி	07
பணிப்பாளரின் செய்தி	08
நிறுவன ஒழுங்கமைப்பு	09
மனித வளங்கள்	10
நிதிச் செயலாற்றுகை	11
அபிவிருத்திச் செயற்பாடுகள்	12 - 25
சேவைகளை ஆற்றல்	26 - 34
2018 டிசம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள்	35 - 64
2018 கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	65 - 70

வழிகாட்டும் கோட்பாடுகள்

நோக்கு

வடிவமைப்பு அபிவிருத்தி மற்றும் புத்தாக்க வடிவமைப்புக்களை அறிமுகம் செய்வதன் மூலம் கைப்பணிக் கைத்தொழில் துறையை மென்மேலும் உயிரோட்டமும், முனைப்பும்மிக்க பொருளாதாரத் துறையாக மாற்றியமைத்தல்.

செயற்பணி

மேம்படுத்தல், அபிவிருத்தி, ஆற்றல்களைக் கட்டியெழுப்பல்,
பிரபல்யப்படுத்தல் மற்றும் பிரதான நீரோட்டத்தில் இணைப்பதன் மூலம் சந்தையை அடிப்படையாகக் கொண்ட ஆக்கபூர்வமான வடிவமைப்புக்களை அறிமுகம் செய்தல்.

Blank Page

நிறுவனத்தின் நோக்கங்கள்

கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களினால் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற கைப்பணிப் பொருட்களை அபிபிருத்தி செய்தல் மற்றும் உள்நாட்டிலும், ஏற்றுமதிச் சந்தையிலும் தற்கால் மற்றும் எதிர்கால சந்தைப் போக்குகளுக்கு அமைய புத்தாக்கங்களை அறிமுகம் செய்தல்.

உற்பத்திக் கொள்ளளவை அதிகரித்துக் கொள்ளல் மற்றும் உயர்தரத்தைக் கொண்ட கைப்பணி பொருட்களை உற்பத்தி செய்வதை நோக்காகக் கொண்டு முறையான தொழில்நுட்ப முறைகள் மற்றும் மூலப் பொருட்களைத் தயார் செய்துகொள்ளும் முறைகளை அறிமுகம் செய்தல்.

வருமானத்தை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் கைப்பணிக் கைத்தொழில் துறையில் மென்மேலும் நல்ல முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு கலைஞர்களுக்கு உயர் நிபுணத்துவ, தொழில்நுட்ப மற்றும் வடிவமைப்பு அபிவிருத்திப் பயிற்சி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களுக்கு புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதற்கான வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் பொது வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

கைப்பணி ஆக்கங்களுக்கு மென்மேலும் வினைத்திறன்மிக்க புத்தாக்க உற்பத்தி முறைகளை அறிமுகம் செய்தல்.

வெளியீடுகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் நூலக வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்கள், விற்பனையாளர்களுக்கு மற்றும் கைப்பணிக் கைத்தொழில் துறையுடன் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் கோரிக்கைகளுக்கு அமைய வடிவமைப்பு மதியுரை சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

வடிவமைப்புசார் ஆக்கபூர்வமான திறன்களை வளர்த்தல் மற்றும் தொழில்சார் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

பெறுமானங்கள்

- ✓ நாம் பொறுப்புடன் கட்டுப்பட்டுள்ளோம்.
- ✓ நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மைமிக்கவர்களாக உள்ளோம்.
- ✓ திறன் மற்றும் கூட்டு முயற்சிகள் பற்றி நம்பிக்கை கொண்டுள்ளோம்.
- ✓ புதிய தொழில்நுட்பம் மற்றும் விருப்பத்தை பயன்படுத்த முனைவோம்.
- ✓ சிறந்த நுகர்வோர் சேவையைப் பெற்றுக் கொடுப்பதாக நம்புகின்றோம்.

நிறுவனச் சட்டமும், பதிவும்

1982 இன் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவையின் இணை நிறுவனச் சட்டத்தின் கீழ் 1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தேசிய வடிவமைப்பு நிலையமானது, உள்நாட்டு கைப்பணிக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக கைப்பணிக் கலைஞர்களை சம்பிரதாயத்திற்கு அப்பால் இட்டுச் சென்று கைப்பணிக் கைத்தொழில் துறையின் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு தாபிக்கப்பட்டு சேவைகளை ஆற்றிவருகின்ற அரச நிறுவனமொன்றாகும் என்பதுடன் தற்போது கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள், நீண்டகால இடம்பெயர்ந்துள்ளவர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

ஒழுங்கமைப்பு

தேசிய வடிவமைப்பு நிலையம், ஒட்டுமொத்த கைப்பணிக் கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்காக தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு எப்பொழுதும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதன் போது மொரட்டுவை, கட்டுபெத்த, டி மெல் வீதியின் இலக்கம் 10 எனும் இடத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகம் மற்றும் மத்திய மாகாணத்தினை உள்ளடக்கும் வகையில் கண்டி, கலாபுரம், நத்தரம்பொத்தயில் அமைந்துள்ள கிளை அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் பல்வேறு செயற்பாடுகளையும் அமுல்படுத்தி கைப்பணிக் கைத்தொழில் கலைஞரை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இதற்கு மேலதிகமாக, டிப்ளோமா பாடநெறி மூலம் புத்தாக்க கலைஞர்களை உருவாக்கும் நிலையமாக செயற்பட்டு வருகின்ற தேசிய வடிவமைப்புக் கல்லூரி தலைமை அலுவலக வளவில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் ஆக்கபூர்வமான ஆற்றல்கள், திறமைகளைக் கொண்டுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தேசிய மட்டத்திலிருந்து சர்வதேச மட்டம் வரை தொழில்சார் அறிவைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நத்தரம்பொத்த கிளை அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ள பித்தலை, அரக்கு மற்றும் தோள் சம்பந்தப்பட்ட வேலைத்தலங்கள் மற்றும் பொது வசதிகள் நிலையத்தின் ஊடாக கைப்பணிக் கைத்தொழில் கலைஞருக்குத் தொடர்ச்சியாக சேவை ஆற்றப்பட்டு வருகின்றது.

தேசிய வடிவமைப்பு நிலையம் தமது நோக்கை பிரதானமாக்க கொண்டு அமுல்படுத்தியுள்ள செயற்பணியின் மூலம் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் போது தலைமை அலுவலகத்தின் முன்னெடுப்புடன் மற்றும் நத்தரம்பொத்தயில் அமைந்துள்ள கிளை அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் செயற்றிட்டத்திற்கு அமைய உரிய பணிகள் அமுல்படுத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டல், தற்போது காணப்படுகின்ற ஏனைய சகோதர நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகள், கைப்பணிக் கைத்தொழில் துறை தொடர்பிலான பல்வேறு அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களாக செயற்படுகின்ற தொண்டர் அமைப்புக்கள், கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்கள் மற்று வேறு வெளி நிறுவனங்கள் மேலே குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக தொடர்ச்சியாக எம்முடன் தொடர்புகொள்கின்றன.

சகல நிருவாக, நிதி, விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகள், வடிவமைப்பு அபிவிருத்தி வடிவமைப்புக் கல்வி, தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆகிய துறைகள் தொடர்பிலான பணிகளும், பொது வசதிகள் மற்றும் நூலக சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற நிறுவனத்தின் பிரதான நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்தற்குரிய சகல பணிகளும் தலைமை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், நிருவாகம், நிதி மற்றும் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகள் தவிர ஏனைய சகல நடவடிக்கைகளும் நத்தரம்பொத்த கருத்திட்ட அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தலைமை அலுவலகம் - இல. 10, டி மெல் வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ.
தொலைபேசி /பெக்ஸ் இல. - 011-2607114 - தலைவர்
011-2626345 - பணிப்பாளர்
011-2607814 - பொது
பெக்ஸ் 011-2607111
மின்னஞ்சல் - slndcrisep@yahoo.com / info@slndc.gov.lk

(ii) நத்தரம்பொத்த கருத்திட்டம் - கலாபுரம், நத்தரம்பொத்த.
அலுவலகம் மற்றும் வேலைத்தலம் தொலைபேசி /பெக்ஸ் இல. - 081-2420038

பணிப்பாளர் சபை

1.	திரு ஏ.எல்.எம். மில்ஹான்	- தலைவர்
2.	திரு எம்.எம். அப்துல் காதர்	- உறுப்பினர்
3.	திருமதி இந்திரா மல்வத்த	- உறுப்பினர்
4.	கலாநிதி எஸ்.எம். மொஹமட் இஸ்மாயில்	- உறுப்பினர் 2018 யூன் மாதம் வரை
5.	செல்வி ஹேஷானி போகொல்லாகம	- உறுப்பினர்
6.	திருமதி டபிள்யு.கே.டி. டன்ஸ்ரன் பிரதிநிதி (2018.08.30 வரை)	- உறுப்பினர்/ திறைசேரியின்
7.	திருமதி எம்.ஏ.சீ.என். செனவிரத்ன	- 2018.08.31 முதல்
8.	திரு பீ.பீ. ரத்நாயக்க	- ஆலோசகர்
9.	திருமதி ஐ.எஸ். பட்டியகமகே முதல்	- அமைச்சின் பிரதிநிதி 2018.03.08

சிரேஷ்ட முகாமைத்துவம்

திரு மில்ஹான் லதீப்	-	தலைவர்
திரு எம்.ஏ.எஸ்.எஸ்.கே. சந்திரசிறி	-	பணிப்பாளர்
திருமதி சோமலதா கம்லத்	-	உதவிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) மேல் மாகாணம் / பிரிவுத் தலைவர்
திரு பீ.கே. விஜேசிங்க	-	உதவிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) மத்திய மாகாணம்
திரு பி. மனதுங்க	-	உதவிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) வடமத்திய மற்றும் வடமேல் மாகாணம்
திருமதி தமரா தமயந்தி	-	உதவிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) ஊவா மற்றும் சபரகமுவா மாகாணம்
திரு டபிள்யு.எம். பியரத்ன	-	உதவிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) தென் மாகாணம்
திரு விஜித பண்டார	-	உதவிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்
திருமதி பீ.ஆர். ரணவீர	-	கணக்காளர்
திரு கே. பிரிசாந்த கீர்த்திசந்திர	-	சிரேஷ்ட கணக்குகள் அலுவலர்
திரு என்.பி.கே. இந்திக்க	-	உதவிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்)
திருமதி பீ.கே.என். அசங்கிகா	-	உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)
திருமதி பீ.ஏ.என்.என். பமுனுசிங்க	-	உதவிப் பணிப்பாளர் (இரசாயனம்)
திரு எஸ்.கே.ஆர்.எஸ். குமார	-	உதவிப் பணிப்பாளர் (பொறியியல்) ஒப்பந்தம்

வங்கியாளர்கள்	**கணக்காய்வு**
இலங்கை வங்கி, கட்டுபெத்த	அரசாங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதி
மக்கள் வங்கி, கட்டுபெத்த	கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

பணிப்பாளரின் செய்தி

1982 இன் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை இணை நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டு 1983 ஆம் ஆண்டு முதல் இயங்கிவருகின்ற தேசிய வடிவமைப்பு நிலையமானது பாரம்பரிய கைப்பணிக் கைத்தொழிலாளர்களை கீழ் மட்டத்திலிருந்து சர்வதேச மட்டம் வரை மேல் உயர்த்திவைப்பதற்கு பாரிய சேவையை ஆற்றக்கூடிய தேசிய நிறுவனமொன்றாகும்.

நோக்கு மற்றும் செயற்பணிக்கு அமைய செயற்பட்டு 2018 ஆம் ஆண்டில் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சேவைகள் பாராட்டுக்குரியவை.

இந்த 2018 ஆம் ஆண்டானது தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 35 வருடகால நிலைத்திருத்தலை பதிவு செய்யும் ஆண்டாக உள்ளதுடன், சேவை ஆற்றும் நிறுவனமொன்றான இந்த நிறுவனமானது பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்படுகின்ற நிதியின் மூலம் இயங்கிவருகின்றது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலை மேம்படுத்தத் தேவையான ஏனைய சேவைகளில் ஆலோசனைச் சேவைகளை நடாத்தல், கற்கைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் மற்றும் பாடநெறிகளை நடாத்துவதன் ஊடாக நிலையம் உழைத்துக் கொண்ட திரட்டிய வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

மீளாய்வு ஆண்டில் நிறுவனம்சார் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பணிப்பாளர் சபை வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவம், பதவியணியினர் உள்ளிட்ட சகல தரப்பினர்களும் வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பை நான் நன்றியுடன் நினைவுகூர்கின்றேன்.

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் கௌரவ ரிஷாத் பதியுதீன் அவர்களின் முறையான வழிகாட்டலின் ஊடாக இன்று கிராமிய கைப்பணிக் கைத்தொழில்துறையானது பாரியளவில் புத்துணர்ச்சிபெற்றுள்ளதென்று குறிப்பிடுவது மிகையாகாது.

கிராமிய பொருளாதாரத்தை உயர் மட்டத்திற்குக் கொண்டுவருவதற்காக விளைதிறன்மிக்கவாறு பங்களிப்பு வழங்கும் பொருட்டு இப்பாரிய செயற்பணிக்கு ஒத்துழைப்பு வழங்கிவருகின்ற நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கும், ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன்.

மில்ஹான் லதீப்

தலைவர்,

தேசிய வடிவமைப்பு நிலையம்.

பணிப்பாளரின் செய்தி

2018 ஆம் ஆண்டின் தேசிய வடிவமைப்பு நிலையத்தின் செயலாற்றுகை மீளாய்வு மற்றும் ஆண்டறிக்கைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிடக் கிடைத்ததையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை இந்த ஆண்டில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. நிறுவனத்தின் பிரதான நோக்கங்களுக்கு அமையவாக மற்றும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு சமாந்தரமாக பல்வேறு வகையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை இந்த ஆண்டில் அமுல்படுத்தும் ஆற்றல் கிடைத்தது.

நாட்டினுள் சமாதானம் மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதன் மூலம் ஏற்பட்டுள்ள சாதகமான சூழல் பொருளாதாரத்தை வளர்ச்சியை உருவாக்கிக் கொள்வதற்கு பெரும் உந்துசக்தியாக அமைந்துள்ளது என்பது தெளிவான விடயமாகும். சரியாக தயார் செய்யப்பட்டுள்ள நிதிசார் கொள்கையானது இந்நாட்டின் பொருளாதாரத்தை தொடர்ச்சியாக வளர்ப்பதற்குத் தேவையான ஊக்கத்தைப் பெற்றுக் கொடுப்பதுடன், இந்த நிலையில் உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறை பற்றி விசேட கவனம் செலுத்த வேண்டி உள்ளது.

கைப்பணிக் கைத்தொழிலாளர்களை மேம்படுத்துவது மற்றும் அதற்கமைய கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக முன்னோடிச் செயற்பணியொன்றை ஆற்றுகின்ற தேசிய வடிவமைப்பு நிலையம் கிராமிய கைப்பணிக் கைத்தொழிலாளரை அபிவிருத்தி செய்ய செயற்பட்டு வருகின்றது. தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற யுகயட்ட நிமவும் தேசிய கைத்தொழில் கண்காட்சி 2018 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்பதேச மாநாட்டு மண்டபத்தில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.


உள்நாட்டு மூலப்பொருட்களுக்கு பெறுமதிசேர்க்கும் வகையில் செயற்பட்டு வருகின்ற கிராமிய கைப்பணிக் கைத்தொழிலை மெருகூட்டுவதற்காக தேசிய வடிவமைப்பு நிலையத்திற்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவத்தை வழங்கிவருகின்றமை தொடர்பில் அமைச்சின் செயலாளர் திரு ரஞ்ஜித் அசோக அவர்களுக்கும் மற்றும் அமைச்சின் ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.ஏ.எஸ்.எஸ்.கே. சந்திரசிறி,

பணிப்பாளர்

தேசிய வடிவமைப்பு நிலையம்.

நிறுவன ஒழுங்கமைப்பு



மனித வளம்

பதவிப் பெயர்	சேவை வகுதி	அங்கீகரித்தது	உள்ளது	வெற்றிடம்
பணிப்பாளர்	HM 1-3	01	01	-
உதவிப் பணிப்பாளர் /பிரதிப் பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி)	MM 1-1	06	06	-
உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்)	MM 1-1	01	01	
உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் (இயந்திரசாதன)	MM 1-1	01	01	-
உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்)	MM 1-1	01	01	-
உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் (இரசாயன)	MM 1-1	01	01	-
கணக்காளர்	MM 1-1	01	01	-
சிரேஷ்ட கணக்கீட்டு அலுவலர்	MM 1-1	01	01	
நிருவாக அலுவலர்	JM 1-1	01	01	-
கணக்கீட்டு அலுவலர்	JM 1-1	02	02	-
கணக்காய்வு அலுவலர்	JM 1-1	01	-	-
சிரேஷ்ட வடிவமைப்பாளர்	JM 1-1	04	01	03
வடிவமைப்பு பயிற்சி ஒருங்கிணைப்பு அலுவலர்	JM 1-1	01	01	-
வடிவமைப்பாளர்	MA 5-1	09	06	03
நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர்	MA 5-1	01	01	-
சந்தைப்படுத்தல் உதவியாளர்	MA 3	01	-	01
நூலக மற்றும் தகவல் உதவியாளர்	MA 3	01	01	-
அபிவிருத்தி உதவியாளர்	MA 3	03	01	02
அந்தரங்க உதவியாளர்	MA 2-1	02	01	01
முகாமைத்துவ உதவியாளர்	MA 1-1	13	11	02
திறன் போதனாசிரியர்	MA 1-1	32	21	11
சாரதி	PL 3	06	04 02 ஒப்பந்தம்	-
அலுவலக சிற்றூழியர்	PL 1-1	17	14	03
காவலாளி	PL 1-1	04	06	-
பயிற்சி உதவியாளர்	PL - 1	01	01	-

தேசிய வடிவமைப்பு நிலையமானது பிரதானமாக சேவை ஆற்றுகின்ற நியாயாதிக்க சபையொன்றாகும். நிதி ஏற்பாடுகள் திறைசேரியின் மூலம் வழங்கப்படுகின்றன.


2018 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுக்கு அமைய பின்வருமாறு நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.


திறைசேரிய ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக நிறுவனத்தினால் ஆற்றப்படுகின்ற ஆலோசனை சேவைகளுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற புதிய வடிவமைப்பு அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்குமான அறவீடுகள் வடிவமைப்பு ஆலொசனை சேவைகள் கணக்கிற்கும்,

நிர்மாண டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா மாணவர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்கள் வடிவமைப்பு கல்வி மற்றும் பயிற்சிக் கணக்கிற்கும் கிடைக்கின்றன.

பதவியணி கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நிதியமாக வடிவமைப்பு கணக்குப் பேணிவரப்படுகின்றது.

2018





1. தேசிய வடிவமைப்பு நிலைய கணக்கு (NDC)
2. ஊழியர் கடன் கணக்கு (SLF)
3. வடிவமைப்பு மதியுரைச் சேவைகள் கணக்கு (DCF)
4. வடிவமைப்பு கல்வி மற்றும் பயிற்சி கணக்கு (DET)

அபிவிருத்திச் செயற்பாடுகள் - 2018

புதிய வடிவமைப்புத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

தேசிய வடிவமைப்பு நிலையமானது, தமது நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி, கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்குப் பொருத்தமானவாறு புத்தாக்கங்களைத் திட்டமிடுவதும், அவற்றைக் கைப்பணிக் கலைஞர்களுக்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக அறிமுகம் செய்வதற்கும் முன்னுரிமை வழங்கி செயற்பட்டு வருவதுடன், இதன் இடைநிலைப் பணியொன்றான திட்டமிடப்பட்ட ஆக்கங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியை தே.வ.நி. வேலைத்தலங்களில் ஆரம்ப மாதிரியமைப்புக்களாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்வதாகும். இதற்கு மேலதிகமாக திட்டமிடப்பட்ட ஆக்கங்களிலிருந்து ஒரு பகுதியை கைப்பணிக் கலைஞர்களின் கோரிக்கையின் அடிப்படையில் அவர்களுக்கு அறிமுகம் செய்வதற்கும் வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி பிரிவு தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
இந்த ஆண்டினுள் 680 புத்தாக்கங்களை திட்டமிட இலக்காகக் கொள்ளப்பட்டிருந்ததுடன், தலைமை அலுவலகத்தின் வடிவமைப்புப் பிரிவு மற்றும் நத்தரப்பொத கிளை அலுவலகத்தினால் 835 புத்தாக்கங்களின் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தே.வ.நி. வேலைத்தலத்தில் புத்தாக்கங்களை மாதிரிகளாக மாற்றியமைப்பதற்கு அவற்றிலிருந்து 579 புத்தாக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக உற்பத்திகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், புதிய வடிவமைப்புக் கண்காட்சிக்காக, வெளி கலைஞர்களின் தேவை மற்றும் கோரிக்கையின் அடிப்படையில் புதிய 256 புத்தாக்கங்கள் திட்டமிடப்பட்டு நேரடியாக வெளிக் கலைஞர்களுக்கு அறிமுகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு தே.வடி.நி. வேலைத்தலங்களுக்கு புதிய வடிவமைப்புத் திட்டங்களைப் பெற்றுக் கொடுக்க வடிவமைப்புப் பிரிவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைப்பணிக் கைத்தொழில் துறை	தே.வடி.நி. வேலைத்தளங்களுக்கு
தலைமை அலுவலகம்	
பன் மற்றும் நார் துறை	52
பலகை துறை	76
ஆடைத் துறை	61
மூங்கில் மற்றும் பிரம்பு	70
செங்களி துறை	51
தும்புத் துறை	60
ஆபரணத் துறை	58
நத்தரம்பொத்த அலுவலகம்	
தோள் துறை	39
பித்தலை துறை	61
அரக்குத் துறை	51
	579
வெளிக் கலைஞர்களின் தேவைகள் மற்றும் கோரிக்கையின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட புதிய வடிவமைப்புக்கள்	256

835


இதற்கு மேலதிகமாக ஆலோசனைக் சேவைகளின் கீழ் மற்றும் வெளி நிறுவனங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் கிரபிக் மற்றும் வீட்டின் உள்ளக அழங்கார ஆக்கங்கள் 50 ஐ திட்டமிடுவதற்கு இலக்காகக் கொள்ளப்பட்டிருந்ததுடன், நேர்வரிசை அமைச்சின் தேவைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் கிரபிக் மற்றும் வீட்டின் உள்ளக அழங்கார ஆக்கங்கள் 87 ஐ திட்டமிடுவதற்கு வடிவமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

புத்தாக்கங்களை உருமாதிரிகளாக மாற்றியமைத்தல்

திட்டமிடப்பட்ட புத்தாக்கக் குறிப்புக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட புத்தாக்கங்கள், மொரட்டுவை மற்றும் நத்தரம்பொத அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள வேலைத்தலங்களின் ஊடாக உருமாதிரிகளாக தயாரிக்கப்படுகின்றன. இதன் போது தோள், பித்தலை மற்றும் அரக்கு ஆகிய துறைகளுக்குத் திட்டமிடப்பட்ட புத்தாக்கங்கள், நத்தரம்பொத வேலைத்தலங்களின் மூலம் உருமாதிரிகளாக தயார் செய்யப்படுவதுடன், பன், நார், செங்களி, தும்பு, மூங்கில், பிரம்பு, ஆடை, பலகை மற்றும் ஆபரணம் ஆகிய துறைகளை பிரதானமாகக் கொண்ட புத்தாக்கங்கள் மொரட்டுவை வேலைத்தலத்தில் உருமாதிரிகளாகத் தயார் செய்யப்படுகின்றன.
இவ்வாறு தயார் செய்யப்பட்ட உருமாதிரிகள், தேசிய வடிமைப்பு நிலையத்தினால் நாடு முழுவதிலும் பல்வேறு கைப்பணித் துறைகளின் கீழ் ஒழுங்குசெய்யப்படுகின்ற புத்தாக்க அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், தேசிய வடிமைப்பு நிலையத்தின் கோரிக்கையின் பேரில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் மூலம் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தேசிய வடிவமைப்பு நிலையத்திற்கு சேவை பெறுவதற்காக வருகைதருகின்ற கலைஞர்கள் ஊடாக, மாகாண சபைகள், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, தேசிய அருங்கலைகள் பேரவை, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஊடாக மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள், புத்தாக்க கண்காட்சிகள், சந்தைகள் மூலம் மற்றும் இலங்கை கைப்பணிக் கைத்தொழில் சபை ஊடாக சந்தைக்கு அறிமுகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தே.வ.நி. வேலைத்தலங்களில் புத்தாக்கங்களை உருமாதிரிகளாக மாற்றியமைப்பதன் கீழ் 2018 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளின் ஊடாக 420 புத்தாக்க உருமாதிரிகளை தயார் செய்வது இலக்காகக் கொள்ளப்பட்டிருந்ததுடன், ஆண்டினுள் 507 புத்தாக்க உருமாதிரிகளைத் தயார் செய்துகொள்ள தேசிய வடிவமைப்பு நிலையம் நடவடிக்கை எடுத்திருந்தது.
ஒவ்வொரு துறைக்கும் தே.வ.நிலையத்தின் வேலைத்தலங்களுக்கு அறிமுகம் செய்யப்பட்ட புத்தாக்கங்கள் பின்வருமாறு ஆரம்ப உருமாதிரிகளாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைப்பணிக் கைத்தொழில் துறை	ஆரம்ப மாதிரி உருக்களின் எண்ணிக்கை
தலைமை அலுவலகம்	
பன் மற்றும் நார் துறை	29
பலகை துறை	66
ஆடைத் துறை	42
மூங்கில் மற்றும் பிரம்பு	47
செங்களி துறை	43
தும்புத் துறை	62
ஆபரணத் துறை	38
நத்தரம்பொத்த அலுவலகம்	
தோள் துறை	34
பித்தலை துறை	87
அரக்குத் துறை	59



இதன் போது மொரட்டுவை தே.வ.நி. வேலைத்தலத்தில் 327 புத்தாக்கங்கள் உருமாதிரிகளாகத் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், நத்தரம்பொத தே.வ.நி. வேலைத்தலத்தில் 180 புத்தாக்கங்கள் உருமாதிரிகளாகத் தயார் செய்யப்பட்டுள்ளன.

கைப்பணிக் கைத்தொழில் புத்தாக்கங்களின் மூலம் நினைவுச்சின்னங்களை தயார் செய்தல்

தேசிய வடிமைப்பு நிலையம் புத்தாக்கங்களின் ஊடாக உள்நாட்டுக் கைப்பணிக் கைத்தொழிலை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையில் பிரபல்யப்படுத்த நடவடிக்கை மேற்கொள்கின்றது. அத்துடன் உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உள்நாட்டு தனித்துவத்தைப் பாதுகாக்கின்றவாறு நினைவுச் சின்னங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்துகின்றது.

புத்தாக்க அபிவிருத்திக்கான செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

➢ **செயற்றிட்டத்தின் கீழ் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

இந்த ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்ட மூலதன ஏற்பாடுகள் ஊடாக ரூ.மி. 2.500 புத்தாக்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதன் ஊடாக விழிப்புணர்வூட்டல், ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், உயர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட புத்தாக்கங்களை அறிமுகம் செய்யும் செயன்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 30 ஐ நடாத்துவதற்கு மற்றும் பயனாளிகள் 600 பேரை இதன் மூலம் பயிற்றுவிக்க இலக்காகக் கொள்ளப்பட்டது.

அதற்கமைய, புத்தாக்கங்களை அறிமுகம் செய்யும் 34 செயன்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நாடு முழுவதிலும் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் நடாத்தப்பட்டு பயனாளிகள் 823 பேருக்கு புத்தாக்க, புதிய தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொடுத்து சந்தைக்குப் பொருத்தமான புத்தாக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

	நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை	கைப்பணிக் கைத்தொழில்துறை	ஆரம்பத் திகதி மற்றும் நடாத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை	மாவட்டம், பி.செ.பி. மற்றும் நடாத்தப்பட்ட இடம்	கலைஞர்களின் எண்ணிக்கை
01	விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்	பன் மற்றும் நார்	சனவரி 19 – 01 நாள்	கம்பஹா - தாரலுவ	29
	புதிய தொழில்நுட்ப ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் 02	பன் மற்றும் நார்	பெப்ருவரி – 16 03 நாட்கள்	கம்பஹா - தாரலுவ	25
	புதிய தொழில்நுட்ப உயர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் 03	பன் மற்றும் நார்	மார்ச் 24 – 02 நாட்கள்	கம்பஹா - தாரலுவ	25
02	விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்	மூங்கில்	சனவரி 26 – 01 நாள்	கேகாலை – எடியாந்தோட்டை	15
	விழிப்புணர்வூட்டும் மற்றும் உபகரணம் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டம்	மூங்கில்	மே 03 01 நாள்	கேகாலை – எடியாந்தோட்டை	42
	புதிய தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் 02	மூங்கில்	ஆகஸ்ட் 06 02 நாள்	கேகாலை – எடியாந்தோட்டை	15

03	புதிய தொழில்நுட்ப உயர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - 01	கைத்தறி பிடவை	பெப்ருவரி 26 03 நாள்	கண்டி – நத்தரம்பொத	32
04	புதிய தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	ஸ்க்றீன் பிரின்ட்	பெப்ருவரி 14 03 நாள்	கண்டி – நத்தரம்பொத	25
05	விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்	தும்பு	பெப்ருவரி 02 01 நாள்	குருநாகல் - கனேவத்த	29
	புதிய தொழில்நுட்ப ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	தும்பு	மார்ச் 12 05 நாள்	குருநாகல் - கனேவத்த	18
06	புத்தாக்க மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்	மூங்கில்	மார்ச் 06 01 நாள்	காலி பத்தேகம – கினிமெல்லகஹ	24
	புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்பபயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - இரண்டாம் கட்டம்	மூங்கில்	யூன் 12 03 நாள்	காலி பத்தேகம – கினிமெல்லகஹ	20
07	புத்தாக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	இலகுரக விளையாட்டு பொருட்கள்	மார்ச் 17 04 நாள்	மொரட்டுவை – கல்தெமுல்ல	30
08	புத்தாக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	ஆடை சம்பந்தமானவை	ஏப்ரல் 03 03 நாள்	கேகாலை - வரகாபொல	30
09	புத்தாக்க மற்றும் ஆரம்ப தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	மூங்கில்	மே 30 – 01 யூன்	கண்டி – குண்டசாலை	17
10	புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்ப ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	கைத்தறி பை	யூன் 05 03 நாள்	கண்டி – குண்டசாலை	27
11	புத்தாக்க மற்றும் உயர் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வாழைப் பட்டை	யூன் 18 05 நாள்	கேகாலை – ரம்புக்கன - அசோககம	24
12	புத்தாக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - ஆரம்ப	பலகை	யூன் 03 05 நாள்	புத்தளம் - சிலாபம்	22
13	புதிய தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பித்தளை	யூலை 24 04 நாள்	கண்டி - பிலிமதலாவ	27
14	புதிய தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	செங்களி	ஆகஸ்ட்	உதாரகம	30
15	புதிய தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	ஸக்ரீன் அச்சு	ஆகஸ்ட்		33
16	புதிய தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	சணல் சம்பந்தப்பட்டவை	செப்தெம்பர் 07 04 நாள்	நுவரெலியா - ஹங்குரன்கெத்த	41
17	புத்தாக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	இலகுரக விளையாட்டு பொருட்கள்	செப்தெம்பர்		26
18	புத்தாக்க பயிற்சி	மூங்கில் மற்றும்	செப்தெம்பர் 10	கம்பஹா –	15

	நிகழ்ச்சித்திட்டம்	பிரம்பு	03 நாள்	நீர்கொழும்பு – தலாஹேன	
19	புத்தாக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	தரைச் சீலை	செப்தெம்பர் 22 03 நாள்	மொரட்டுவை – கல்தெமுல்ல	19
20	புத்தாக்க ஆரம்ப தொழில்நுட்ப ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	செங்களி	அக்டோபர் 09 03 நாள்	அநுராதபுரம் - மிகிந்தலை எலபுபன்குளம்	35
	புத்தாக்க உயர் தொழில்நுட்ப ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்		டிசம்பர் 04 02 நாள்		41
21	விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்	தென்னை சிரட்டை	அக்டோபர் 11 01 நாள்	அநுராதபுரம்	
	புத்தாக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்		அக்டோபர் 19 05 நாள்		29
22	புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பாதணி	அக்டோபர் 29 04 நாள்	கண்டி	25
23	புத்தாக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	தென்னை சிரட்டை	நவம்பர் 12 03 நாள்	மொரட்டுவை	13
24	புத்தாக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	உலர் சோளம்	டிசம்பர் 03 நாள்	கண்டி - கலகெதர	15

- **அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் கோரிக்கைகள் மற்றும் ஏற்பாடுகளின் கீழ் புத்தாக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்**

அர மற்றும் அரசசசார்பற்ற நிறுவனங்களின் கோரிக்கை மற்றும் ஏற்பாடுகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் ஊடாக கைப்பணிக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் இத்துறையைச் சேர்ந்த புதிய இளைஞர் குழுக்களுக்கு சந்தைக்கு உகந்தவாறு புத்தாக்கங்களை அறிமுகம் செய்தல் மற்றும் புதிய தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உயர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டதுடன், பயனாளிகள் 222 பேருக்குத் தேவையான அறிவும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

	நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை	கைப்பணிக் கைத்தொழில்துறை	ஆரம்பத் திகதி மற்றும் நடாத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை	மாவட்டம்	கலைஞர்களின் எண்ணிக்கை	நிதிப் பங்களிப்பை வழங்கிய நிறுவனம்	அறிமுகம் செய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கை
01	புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்ப ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பலகை	சனவரி 24 03 நாள்	குருநாகல்	12	இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை	
02	புதிய தொழில்நுட்ப உயர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் 03	பனைஓலை	மார்ச் 01 04 நாள்	வவுனியா	30	யு.என்.டி.பி.	
03	புத்தாக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	செங்களி	ஏப்ரல் 21 01 நாள்	கொழும்பு – தொம்பே – களுகொந்தயாவ	10	பி.செ. – தொம்பே	10
04	புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	கைத்தறி பை	யூன் 11 03 நாள்	கண்டி – குண்டசாலை	29	ரெடா	
05	புதிய தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பைபர் கிளாஸ்	யூன் 04 02 நாள்	மாத்தளை பல்லேபொல	30	பி.செ. பல்லெபொல	
06	புத்தாக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	தும்பு	யூலை 29	காலி – தொடந்துவ	10	மாகாண கைத்தொழில் திணைக்களம்	06
07	புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	கைத்தறி பை	யூலை 17 03 நாள்	இரத்தினபுரி – லக்சபான – பொல்பிட்டிய	25	ரெடா	06
08	புதிய தொழில்நுட்ப ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பைபர் மற்றும் இறப்பர் அச்சு	யூலை 10 03 நாள்	கண்டி – குண்டசாலை -திகன	20	இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை, மகாவலி அதிகாரசபை	10
09	புதிய தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	ஸ்க்ரீன் பிரின்ரின்	செப்தெம்	மாத்தளை	33	மத்திய வங்கி	
10	புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	கைத்தறி பிடவை - பை	அக்டோபர் 10	மாத்தளை	25	பிராந்திய தொழில்முயற்சிசார் நிறுவகம்	6

தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் அமுல்படுத்தப்பட்ட மற்றும் பங்களிப்பு வழங்கப்பட்ட கருத்திட்டங்கள்

தொழில்முயற்சிசார் கிராமம் மற்றும் பெண் தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2018

கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் தேசிய அருங்கலைகள் பேரவையினால் அமுல்படுத்தப்படுகின்ற மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் புத்தாக்க அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.
அதற்கமைய, தேசிய அருங்கலைகள் பேரவையினால் தெரிவு செய்யப்பட்ட 06 கைப்பணிக் கிராமங்களுக்கான புத்தாக்க அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்காக ஒரு கிராமத்திற்கு ரூ.மி. 0.3 வீதம் 06 கிராமங்களுக்கும் ரூ.மி. 1.8 ஆன நிதி ஏற்பாடு தேசிய அருங்கலைகள் பேரவை ஊடாக தேசிய வடிவமைக்கு நிலையத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதன் மூலம், கைப்பணிக் கலைஞர்கள் 256 பேருக்கு புத்தாக்க அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக பயன்களைப் பெற்றுக் கொடுக்க தேசிய வடிவமைப்பு நிலையம் நடவடிக்கை மேற்கொண்டது.

மாவட்டம்	**கிராமம்**	கைப்பணிக் கைத்தொழில் துறை	**செலவினம் ரூ.மி.**	பயனாளிகள்
அநுராதபுரம்	லுல்னேவ	செங்களி	0.300	42
கேகாலை	பல்லபான	செங்களி	0.300	35
கம்பஹா	வராகொட	செங்களி	0.300	35
மாத்தறை	மங்கள சமரவீரபுர	மணிவகை	0.300	38
அம்பாறை	உஹன	செங்களி	0.300	35
மொனராகலை	சேனாபதிய	பிரம்பு	0.300	71

கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு புத்தாக்கங்களை அறிமுகம் செய்தல்

கைப்பணிக் கைத்தொழில் துறையில் சந்தைக்குப் பொருத்தமான புத்தாக்கங்களைத் திட்டமிடுவது தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பிரதான பணியொன்றாகும் என்பதுடன், அவ்வாறு திட்டமிடப்பட்டுள்ள புத்தாக்கங்களை பல்வேறு விதமாக கைப்பணிக் கலைஞரிடம் சமர்ப்பிப்பதற்கு தேசிய வடிவமைப்பு நிலையம் செயற்பட்டு வருகின்றது. செயற்றிட்டத்தின் கீழ், அரசசார்பற்ற அமைப்புக்களின் ஏற்பாடுகளின் கீழ், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் கோரிக்கைகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற புத்தாக்கங்களை அறிமுகம் செய்யும் பயிற்சி

நிகழச்சித்திட்டங்கள் ஊடாக மற்றும் நிறுவனத்தின் வேலைத்தளங்களுக்கு வருகைதந்து பயிற்சி பெறுகின்றவர்கள் ஊடாக மற்றும் கலைஞர்களின் கோரிக்கை மற்றும் தேவையின் அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற புத்தாக்க திட்டங்கள் மூலம் தேசிய வடிவமைப்பு நிலையமானது கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு புத்தாக்கங்களை அறிமுகம் செய்கின்றது.
அதற்கமைய மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2018 ஆம் ஆண்டில் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் திட்டமிடப்பட்டுள்ள 470 புத்தாக்கங்களை அறிமுகம் செய்ய இலக்காகக் கொள்ளப்பட்டதுடன், 531 புத்தாக்கங்களை உண்மையாக அறிமுகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைப்பணிக் கைத்தொழில் புதிய உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

தேசிய வடிவமைப்பு நிலையம் வருடாந்தம் ஒழுங்கு செய்கின்ற யுகயட்ட நிமவும் புத்தாக்க கைப்பணிக் கண்காட்சியை முன்னிட்டு உற்பத்திகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன், 2018 ஆம் ஆண்டிலும் மேற்படி நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

அதற்கமைய, தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் கைப்பணிக் கைத்தொழில் துறைக்காக வடிவமைக்கப்படுகின்ற புத்தாக்கங்கள் இந்த உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நாடு முழுவதிலும் பரந்துள்ள கலைஞர்களில் திறமைகளைக் கொண்ட கைப்பணிக் கலைஞர்களுக்கு அறிமுகம் செய்வது மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், கலைஞர்களுக்கு இந்தப் புத்தாக்கங்களை அறிமுகம் செய்யும் போது, இந்த ஆக்கங்களை மேற்கொள்ளத் தேவையான அறிவு, தொழில்நுட்பம் என்பன தேசிய வடிவமைப்பு நிலையத்தின் அலுவலர்களினால் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், மேற்படி புத்தாக்கங்களை உற்பத்தி செய்வது பற்றி தொடர்ச்சியாக பின்னாய்வும் மேற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறு கைப்பணிக் கலைஞர்களினால் தரமான மட்டத்தில் சந்தையின் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு மேற்கொள்ளப்படுகின்ற இந்த ஆக்கங்கள் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்ற யுகயட்ட நிமவும் புத்தாக்க கைப்பணிக் கண்காட்சியின் போது விற்பனைக்காக சமர்ப்பிக்கப்படுவதுடன், மேற்படி விற்பனை வருமானம் கலைஞர்களைச் சென்றடைவதற்கான பொறிமுறை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2018 ஆம் ஆண்டில் உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு சகல கைப்பணிக் கைத்தொழில் துறைகளையும் உள்ளடக்கும் வகையில் கலைஞர்கள் 70 பேர் தொடர்புபடுத்திக் கொள்ளப்பட்டார்கள் என்பதுடன், யுகயட்ட நிமவும் கண்காட்சியின் போது அவர்களின் புத்தாக்கங்களை விற்பனை செய்து பெற்றுக் கொண்ட வருமானம் ரூ.மி. 1.2 ஆக காணப்பட்டது.

கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகளுக்கான சந்தைத் தொடர்புகளை கட்டியெழுப்பல்

தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் உருவாக்கப்படுகின்ற புத்தாக்கங்களுக்கு சந்தைத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதன் கீழ் பின்வரும் பணிகள் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

1. இலங்கை கைப்பணிக் கைத்தொழில் சபைக்கு மேற்படி புத்தாக்கங்களை அறிமுகம் செய்தல் மற்றும் கிடைக்கின்ற கட்டளைகளை கைப்பணிக் கலைஞர்கள் ஊடாக உற்பத்தி செய்து விநியோகித்தல்.
2. கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள தனியார் துறை நிறுவனங்களுக்கு புத்தாக்கங்களை அறிமுகம் செய்தல் மற்றும் கிடைக்கின்ற கட்டளைகளை கலைஞர்களுக்குப் பெற்றுக் கொடுத்து சந்தை தொடர்பைக் கட்டியெழுப்பல்.
3. வருடாந்தம் நடாத்தப்படுகின்ற யுகயட்ட நிமவும் புத்தாக்க கண்காட்சியை முன்னிட்டு உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக கலைஞர்களுக்க சந்தை வாய்ப்பைச் செய்துகொடுத்தல் மற்றும் கிடைக்கின்ற கட்டளைகளை கலைஞர்களுக்குப் பெற்றுக் கொடுத்து சந்தைத் தொடர்பைக் கட்டியெழுப்பல்.

அதற்கமைய, 2018 செயற்றிட்டத்தின் கீழ் கலைஞர்கள் 100 பேருக்கு சந்தைத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவது இலக்காகக் கொள்ளப்பட்டதுடன், அதன் கீழ் கலைஞர்கள் 103 பேருக்கு சந்தைத் தொடர்புகளைக் கட்டியெழுப்ப நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டது.

சந்தை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு அறிமுகம் செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற புத்தாக்கங்களுக்கான சந்தை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை சந்தைப்படுத்தல் பிரிவினூடாக மேற்கொண்டு அதன் பெறுபேறுகளாக அதற்குரிய அதவானிப்புக்களை வடிவமைப்புப் பிரிவுக்கு பெற்றுக் கொடுப்பதுடன், வடிவமைப்புப் பிரிவானது புத்தாக்கங்களை மேற்கொள்ளும் போது மேற்படி தரவுகள் தொடர்பில் கவனத்தைச் செலுத்தும்.

அதற்கமைய, சந்தைத் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான புத்தாக்கங்களை வடிவமைப்பதை மேற்கொள்ளத் தேவையான வழிகாட்டல்கள் இந்த சந்தை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில் வீட்டின் உட்புற அழங்கரிப்புக்கு கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகளுக்கு உள்ள கேள்வி பற்றிய சந்தை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டமொன்று கொழும்பு

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபவத்தில், 2018 யூலை 06 முதல் 09 வரை இடம்பெற்ற வீட்டின் உட்புற அழங்கார உற்பத்திகளை பிரதானமாகக் கொண்ட ஹோம் என்ட் யு கண்காட்சியின் போது புத்தாக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டன.
மேலும், 2018 டிசம்பர் 13 முதல் 16 வரை இடம்பெற்ற யுகயட்ட நிமவும் புத்தாக்க கைப்பணிக் கைத்தொழில் கண்காட்சிக்கு இந்த ஆக்கங்களைச் சமர்ப்பித்து புத்தாக்கங்கள் பற்றிய சந்தை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் சகல கைப்பணிக் கைத்தொழில் துறைகளையும் உள்ளடக்கும் வகையில் சந்தைப்படுத்தல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

யுகயட்ட நிமவும் - 2018 புத்தாக்க கைப்பணிக் கைத்தொழில் கண்காட்சி

தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்ற யுகயட்ட நிமவும் - 2018 புத்தாக்க கைப்பணிக் கைத்தொழில் கண்காட்சி 2018 டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நுனசெவண வளவில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டது.
தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு அறிமுகம் செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற புத்தாக்கங்கள் சுமார் 350 இற்கும் மேல் இந்தக் கண்காட்சியின் போது காட்சிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், கண்காட்சியை முன்னிட்டு உற்பத்தி அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட கைப்பணிக் கலைஞர்கள் 70 பேரினால் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்கங்களை விற்பனை செய்வதும் இந்தக் கண்காட்சி ஊடாக மேற்கொள்ளப்பட்டது.
தேசிய வடிவமைப்பு நிலையம் வருடாந்தம் ஒழுங்கு செய்கின்ற யுகயட்ட நிமவும் - 2018 புத்தாக்க கைப்பணிக் கைத்தொழில் கண்காட்சி ஊடாக பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- உள்நாட்டுக் கைப்பணிக் கலைஞர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற புத்தாக்கங்களை சந்தைக்கு அறிமுகம் செய்தல்.
- தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு அறிமுகம் செய்யப்படுகின்ற புத்தாக்கங்களை வெளியிடல்.
- கைப்பணிக் கலைஞர்கள் மற்றும் கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகளை கொள்வனவு செய்வோருக்கு இடையே தொடர்புகளை உருவாக்குவதன் மூலம் கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகளை விநியோகிக்கும் வலையமைப்பை வலுவூட்டல்.

வருடாந்தம் நடாத்தப்படுகின்ற இந்த யுகயட்ட நிமவும் புத்தாக்க கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திக் கண்காட்சியில் செங்களி, பலகை, பன் மற்றும் நார், தும்பு, பித்தளை, அரக்கு, தோள், ஆபரணம் மற்றும் பிரம்பு மற்றும் ஆடைகள், நினைவுச் சின்னங்கள் போன்ற துறைகளின் கீழ் புத்தாக்கங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன

தேசிய அருங்கலைகள் பேரவையுடனான ஒருங்கிணைப்பு

அருங்கலைகள் 2018 தேசிய கண்காட்சி

தேசிய அருங்கலைகள் பேரவையினால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்ற மேற்படி கண்காட்சியின் ஆரம்ப கடமைகளின் கீழ் மாவட்ட மட்டத்தில் கைப்பணிக் கலைஞர்களை விழிப்புணர்வூட்டும் சகல நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பங்களிப்பை வழங்கி புத்தாக்கம் தொடர்பிலான ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பிற நிறுவனங்கள் ஒழுங்கு செய்கின்ற கண்காட்சிகளுக்கு பங்களிப்பு வழங்குதல்.

அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்களினால் ஒழுங்குசெய்யப்படுகின்ற கண்காட்சிகளுக்கு தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பங்களிப்பை பெற்றுத் தருமாறு வருடம் முழுவதிலும் கோரிக்கை விடுக்கப்படுவதுடன், அரச நிறுவனம் என்ற வகையில் கட்டாயமாக பங்களிப்பை வழங்க வேண்டிய கண்காட்சிகளுக்கு பங்களிப்பை பெற்றுக் கொடுக்கவும், ஏனைய கோரிக்கைகளில் நிறுவனம் மற்றும் கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு முக்கியத்துவம்வாய்ந்த கண்காட்சிகளைத் தெரிவு செய்து பங்களிப்பைப் பெற்றுக் கொடுக்கவும் தேசிய வடிவமைப்பு நிலையம் நடவடிக்கை மேற்கொள்கின்றது.

அதற்கமைய, 2018 ஆம் ஆண்டில் பின்வரும் கண்காட்சிகளுக்கு தேசிய வடிவமைப்பு நிலையம் பங்களிப்புச் செய்தது.

1. புத்தர் பெருமானின் புனித தாதுக்கள் உள்ளடங்களாக வரலாற்றுப் பெறுமானங்களைக் கொண்டதாக, அலரி மாளிகையில் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி முதல் மே மாதம் 02 ஆம் திகதி வரை நடைபெற்ற ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட புத்தரஷ்மி வெசாக் கண்காட்சி
2. நிதி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆகஸ்ட் 29-31 ஆம் திகதி வரை மொனராகலையில் நடைபெற்ற கண்காட்சி

நூலக சேவைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்

கட்டுபெத்த தலைமை அலுவலக வளாகத்தில் மற்றும் நத்தரம்பொல கிளை அலுவலகத்தில் அமைந்துள்ள நூலகங்களுக்கு ஒதுக்கப்பட்ட மூலதன ஏற்பாடுகள் மூலம் இந்த ஆண்டுக்கு ரூ.மி.

0.101 பெறுமதிமிக்க புதிய புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நூலகத்தின் புத்தகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, நூலகத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைப்பணிக் கைத்தொழில் துறை தொடர்பிலான விசேட மற்றும் அரிதான புத்தகங்களை கொண்ட இந்த நூலகம் மூலம் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற டிப்ளோமா பாடநெறியைக் கற்கின்ற மாணவர்கள் மற்றும் கைப்பணிக் கைத்தொழில் துறை தொடர்பிலான் கற்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பல்கலைக் கழக மாணவர்களுக்குத் தேவையான அறிவைப் பெற்றுக் கொடுக்க பெரும் உறுதுணையாக அமைந்துள்ளதுடன், இதற்கு மேலதிகமாக கைப்பணிக் கலைஞர்களுக்கும், இத்துறை தொடர்பில் ஊக்கம் கொண்டுள்ளவர்களுக்கும் தேவையான நூலக சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல், தகவல்களை வழங்குதல் மற்றும் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு அவசியமான ஆக்கவடிவமைப்புக்களின் பிரதிகளைப் பெற்றுக் கொடுக்கும் சேவையும் இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்வித் துறையின் நடவடிக்கைகள்

இலங்கை தேசிய முன்வடிவமைப்புக் கல்லூரி

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் கீழ் பேணிவரப்படுகின்ற இலங்கை தேசிய வடிவமைப்புக் கல்லூரி ஊடாக தேசிய வடிவமைப்பு டிப்ளோமா பாடநெறி மற்றும் தேசிய வடிவமைப்பு உயர் டிப்ளோமா பாடநெறி மூலம் இந்தத் துறையில் ஊக்கம் கொண்டுள்ள இளைஞர் யுவதிகளுக்குத் தேவையான கோட்பாடுசார் மற்றும் செயன்முறை அறிவைப் பெற்றுக் கொடுத்து அவர்களை தொழில்சார் வடிவமைப்பாளர்களாக சமூகத்திற்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தப் பாடநெறிகளைக் கற்றுக் கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளும் கோட்பாடுசார் மற்றும் செயன்முறை அறிவைப் பயன்படுத்தி சுயதொழில் வாய்ப்புக்களை ஆரம்பிக்கவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

மேற்படி பாடநெறிகள் வாரஇறுதி பாடநெறிகளாக அமுல்படுத்தப்படுவதுடன், இந்த ஆண்டில் இவ்விரண்டு பாடநெறிகளும் நடாத்தப்பட்டன.

இந்தப் பாடநெறியில் பங்கேற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறாகும்.

- வீட்டு உட்புற வடிவமைப்பு பற்றிய தேசிய டிப்ளோமா பாடநெறி – 2017-2018 (வாரஇறுதி)
  இப்பாடநெறியின் கற்கை நடவடிக்கைகளை நிறைவு செய்து இறுதிப் பரீட்சையும் நடாத்தப்பட்டது. இதில் மாணவர்கள் 64 பேர் பங்கேற்றார்கள்.

- வீட்டு உட்புற வடிவமைப்பு பற்றிய தேசிய உயர் டிப்ளோமா பாடநெறி – 2018-2019 (வாரஇறுதி)

  இப்பாடநெறியின் கற்கை நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதற்கு மாணவர்கள் 34 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

தேசிய வடிவமைப்பு நிலையத்திற்கான ஊக்குவிப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் - 2018

எமது நிறுவனத்தின் ஊடாக நாட்டுக்கு ஆற்றப்படவேண்டிய சேவைகள் மற்றும் பொறுப்புக்களை மிக்க வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் உச்ச பங்களிப்புடனும் நிறைவேற்றத் தேவையான வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் சகல பதவியணியினர் மத்தியிலும் குழு உணர்வை வளர்த்தல், கூட்டாகவும், அன்னியோன்ய உறவுகளை வளர்ப்பதற்காகவும் தலைமைத்துவப் பயிற்சி – சாதகமான மனப்பாங்கு அபிவிருத்தியை உள்ளடக்கிய ஊக்குவிப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுல்படுத்த நாம் திட்டமிட்டோம்.
அதற்கமைய, இந்த நிகழ்ச்சித்திட்டம் 2018.07.20 பண்டாரகம சர்வோதய பயிற்சி நிறுவகத்தில் சகல பதவியணியினருக்காகவும் நடாத்தப்பட்டது.

தேசிய வடிவமைப்பு நிலையத்தினூடாக சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்

2018 ஆம் ஆண்டில் செயற்றிட்டத்தின் கீழ், வேறு நிறுவனங்களின் கோரிக்கைகளின் கீழ் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் ஏற்பாடுகளின் கீழ் தேசிய வடிவமைப்பு நிலையத்திடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொண்ட பயனாளிகளுக்கு மேலதிகமாக கட்டளைகள் மற்றும் சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல், சந்தை, கைப்பணிக் கலைஞர்கள், துறைசார் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல், நிறுவனத்தின் வேலைத்தலங்களில் செயன்முறைப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல், பொது வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், நிறுவனத்திற்கு வருகைதருகின்ற அல்லது கோரிக்கைகளின் அடிப்படையில் வடிவமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற சேவைகள் ஊடாக மற்றும் கைப்பணிக் கைத்தொழில் துறை பற்றி ஊக்கம் கொண்டுள்ள மற்றும் கற்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக் கழக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு கைப்பணிக் கைத்தொழில் துறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளும் கருத்திட்டங்களுக்குத் தேவையான

கோட்பாடுசார் மற்றும் செயன்முறை அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்கு மற்றும் நிறுவனத்திற்கு குழுக்களாக வருகைதருகின்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி தேவையான சேவைகைளப் பெற்றுக் கொடுத்தல் போன்ற சேவைகளின் கீழ் தேசிய வடிவமைப்பு நிலையம் பயனாளிகள் 1873 பேருக்கு சேவைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வடிவமைப்பு ஆலோசனைச் சேவைகள்

தேசிய வடிவமைப்பு நிலையம் தொழில்சார் மட்டத்திலான வடிமைப்பு ஆலோசனைச் சேவைகளைப் பின்வரும் துறைகளின் கீழ் பெற்றுக் கொடுக்கின்றது.

- ஆக்கங்களுக்கான எண்ணக்கருக்களை கட்டியெழுப்பல்,
- வீட்டு உள்ளக அழக்கார நடவடிக்கைகள்
- கண்காட்சிகளுக்கான ஆக்க நடவடிக்கைகள் (உள்ளக மற்றும் வெளிப்புற)
- நினைவுச் சின்னம் மற்றும் நினைவுத்தூபிகள் மற்றும் நினைவு ஆக்கங்கள்
- கிரபிக் வடிவமைப்பு

இதற்கமைய, 2018 ஆம் ஆண்டில் அரச மற்றும் ஏனைய நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் பின்வரும் ஆலோசனை சேவைகள் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் வழங்கப்பட்டன.

1. புத்தர் பெருமானின் புனித தாதுக்கள் உட்பட வரலாற்று பெறுமானங்களைக் கொண்ட, அலரி மாளிகையில் நடைபெற்ற புத்தரஷ்மி வெசாக் கண்காட்சிக்கு இலங்கை கைப்பணிக் கைத்தொழில் சபை ஒதுக்கிக் கொண்டிருந்த கண்காட்சிக் கூடத்தை வடிவமைத்து நிர்மாணித்தல்.
2. தேசிய அருங்கலைகள் பேரவையினால் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட சில்ப நவோதா கண்காட்சியின் உள்ளக திட்டமிடல் மற்றும் அழங்கார நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
3. இலங்கை கைப்பணிக் கைத்தொழில் சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த கட்டுநாயக்க விமான நிலையத்தின் கண்காட்சி வளவின் உள்ளக வடிவமைப்பைத் திட்டமிட்டமை.
4. வீ – 2025 – என்ரபிரைசஸ் - மொனராகலையில் நடைபெற்ற கண்காட்சியின் போது கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சுக்கு உரித்தான கண்காட்சிக் கூடத்தை வடிவமைத்தல்.

தேசிய வடிமைப்பு நிலையத்தின் புதிய கட்டிடத்திற்கான ஏற்பாடுகளை ஒதுக்குதல்

மொரட்டுவை கட்டுபெத்தயில் அமைந்துள்ள தேசிய வடிவமைப்பு நிலையத்தின் வளவில் பழைய கட்டிடத்தை அகற்றி புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ரூ.மி. 80 ஆன தொகை 2017 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டதுடன், இதில் ரூ.மி. 60 ஆன ஏற்பாடுகளை அதன் நிர்மாணப் பணிகளுக்காக 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் நிர்மாணப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் பணி 2018 மே மாதம் 04 ஆம் திகதி கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு ரஞ்ஜித் அசோக தலைமையில் நடைபெற்றது.

தேசிய வடிவமைப்பு நிலையம்
பொழிப்பு வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2018

1.	**கருத்திட்டம்**	**புத்தாக்க திட்டமிடல்**				
	உத்தேச முடிவு	**ஒதுக்கம் ரூ.மி.**	**செயலாற்றுகை தகவுதிறன்**	**வருடாந்த இலக்கு**	**முன்னேற்றம்**	
					பௌதீக	**நிதிசார்**
	புத்தாக்கங்களுக்கான பிரவேசத்தை மேம்படுத்தல்	4.120	புத்தாக்க திட்டங்களின் எண்ணிக்கை	680	835	3.193
			தயார் செய்யப்பட்ட ஆரம்ப மூலங்களின் எண்ணிக்கை	420	507	
			கைப்பணிக் கலைஞர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கை	470	531	
			பதவியணி பயிற்சி	110	110	
2.	**கருத்திட்டம்**	**வேலைத்தளங்கள் மற்றும் வடிவமைப்பு ஆய்வுகூடங்கள் உரித்தான புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல்**				
	தே.வடி.நிலையத்தினால் கைப்பணிக் கைத்தொழில் துறைக்கு ஆற்றப்படுகின்ற சேவைகளை மேம்படுத்தல்	60.000	கட்டிடங்களின் எண்ணிக்கை	01	நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன 80%	31.628
3.	**கருத்திட்டம்**	**புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொடுத்தல்**				
	புத்தாக்கங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பத்தை	3.920	நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	30	34	3.131

	அறிமுகம் செய்வதன் மூலம் கைப்பணிக் கலைஞர்களின் அறிவு மற்றும் ஆற்றல்களை மேம்படுத்தல்		பயிற்சிக்கு விண்ணப்பித்த எண்ணிக்கை	07	10	
			வேலைத்தளத்திற்கு வருகைதந்து பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை	50	83	
			பயிற்சி பெற்ற கலைஞர்களின் எண்ணிக்கை	600	823	
4.	**கருத்திட்டம்**	**பதிலீட்டு மூலப்பொருட்கள் மற்றும் செயற்பாடுகளை அறிமுகம் செய்யும் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**				
	கைப்பணிக் கலைஞர்களின் அறிவு மற்றும் ஆற்றல்களை மேம்படுத்தல்	2.160	அறிமுகம் செய்யப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்களின் எண்ணிக்கை	03	02 (01 அமுலில் உள்ளது)	0.627
5.	**கருத்திட்டம்**	**புதிய கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகளை பிரபல்யப்படுத்தல் மற்றும் பிரதான போக்குக்கு இசைவானதாக்குதல்**				
	புதிய சந்தைகளுக்கான பிரவேசத்தை மேம்படுத்தல்	9.800	சந்தையில் பிரபல்யமடைந்துள்ள புத்தாக்கங்கள்	250	286	7.807
			சந்தைத் தொடர்புகளின் எண்ணிக்கை (கலைஞர்கள்)	100	103	
			புத்தாக்க கண்காட்சிகளின் எண்ணிக்கை	பிதான - 01 ஏனையன -05	பிதான - 01 ஏனையன -02	
	மூலதன ஏற்பாடு – முழு மொத்தம்	80.000				46.386
	கருத்திட்டம்	**தேசிய நிர்மாணக் கல்லூரி ஊடாக டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்**				
	வீட்டு உள்ளக அழங்காரம் மற்றும் உற்பத்திகளுக்கான புதிய திட்டங்கள் பற்றிய ஆற்றல்கள் மற்றும் அறிவை மேம்படுத்தல்	உழைத்த ஏற்பாடு	டிப்ளோமா பாடநெறிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	70	2017 பாடநெறி தற்போது நடைபெற்று வருகின்றது	
			டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை	60	63	
			உயர் டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை	40	34	
			உயர் டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களின்	30	நடைபெற்று	

			எண்ணிக்கை		வருகின்றது	
	கருத்திட்டம்	**வடிவமைப்பு ஆலோசனைச் சேவை**				
	சேவை பெறுநரின் கோரிக்கையின் பேரில் மிகச் சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுத்தல்	வெளி ஏற்பாடுகளின் கீழ்	ஆற்றிய ஆலோசனை சேவைகளின் எண்ணிக்கை	03	04	

உற்பத்திகள் - 2018

ஆடை



செங்களி



தும்பு



உற்பத்திகள் - 2018

பலகைசார்ந்தவை







பன் மற்றும் நார்







மூங்கில் மற்றும் பிரம்பு











ஆபரணம்






அரக்கு





தோள்





“யுகயட்ட நிமவும்” புத்தாக்க கைப்பணிக் கண்காட்சி 2018

கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்



















2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள்

தேசிய வடிவமைப்பு நிலையம்
2018.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2018.12.31 ரூபா	2017.12.31 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறையல்ல சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	1	68,938,678.95	53,984,062.04
		68,938,678.95	53,984,062.04
நடைமுறை சொத்துக்கள்			
இறுதி இருப்பு	2	6,141,102.25	6,922,938.26
வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை	3	16,500,577.78	7,996,367.31
பதவியணியினர் கடன்	4	11,204,694.38	8,252,070.22
முன்கொடுப்பனவு	5	362,183.82	446,481.68
காசும், காசுக்கு சமமானவையும்	6	17,714,350.23	21,932,982.19
		51,922,908.46	45,550,839.66
மொத்த சொத்துக்கள்		120,861,587.41	99,534,901.70
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை	7	5,040,774.72	968,664.30
UNDP நிகழ்ச்சித்திட்டத்திற்கு முற்பணமாக கிடைத்த நிதி	8	4,634,144.05	7,352,810.00
நின்ற செலவினம்	9	1,706,655.07	1,890,132.73
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்		11,381,573.84	10,211,607.03
பணிக்கொடைக்கான ஒதுக்கம்	10	25,036,671.00	24,790,020.50
மொத்த பொறுப்புக்கள்		36,418,244.84	35,001,627.53
மொத்த தேறிய சொத்துக்கள்		**84,443,342.57**	**64,533,274.17**
தேறிய சொத்துக்கள் / உரிமையாண்மை			
பிற்போடப்பட்ட அறவீட்டு வருமானம்			
மூலதனக் கொடை		79,492,290.03	53,285,721.17
குறைக்க			
தேய்மான ஒதுக்கம்			
நடைமுறை ஆண்டு	11	7,337,317.89	8,385,431.14
குறைக்க		72,154,972.14	44,900,290.03

பிற்போடப்பட்ட அறவீட்டு வருமானத்தை பதிவழிப்புச் செய்தல்		12,062,543.19	11,720,000.00
		60,092,428.95	33,180,290.03
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		6,578,345.91	6,578,345.91
திரண்ட நிதியம்	12	17,772,567.71	24,774,638.23
மொத்த தேறிய சொத்து/ உரிமையாண்மை		**84,443,342.57**	**64,533,274.17**

நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் பூர்த்தியடைவதற்குத் தேவையான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் பக்கம் 10 முதல் 11 வரையான குறிப்புக்கள் மற்றும் பக்கம் 12 முதல் 25 வரை காணப்படுகின்றன.
உண்மையான மற்றும் நியாயமான நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் சமர்ப்பித்தல் பணிப்பாளர்களின் பொறுப்பாகும் என்பதுடன், பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றக்கள் சார்பாக கைஒப்பமிடப்பட்டது.

.....	.....	.....	.....
பி.ஆர் ரணவீர	எம்.ஏ.ஏ.எஸ்.கே. சந்திரசிறி	மில்ஹான் லதீவ்	எம்.எம் அப்துல் காதர்
கணக்காளர்	பணிப்பாளர்	தலைவர்	பணிப்பாளர் சபை அங்கத்தவர்
24.02.2019	25.02.2019	25.02.2019	25.02.2019

தேசிய வடிவமைப்பு நிலையம்
2018.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிசார் செயலாற்றுகை பற்றிய கூற்று

	குறிப்பு	2017 ரூபா	2017 ரூபா
செயற்பாட்டு வருமானம்			
திறைசேரிக் கொடை – மீண்டெழுவன	13	61,029,188.00	58,023,332.00
திறைசேரிக் கொடை - அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மூலதனம்		12,062,543.19	11,720,000.00
அமைச்சின் கொடை - அபிவிருத்திச் செயற்பாடுகள்		13,514,451.28	12,422,059.01
தேசிய அருங்கலைப் பேரவையின் கொடை – அபிவிருத்திச் செயற்பாடுகள்		1,527,335.81	
வேறு வருமானம்	14	5,165,465.16	20,784,596.52
		93,298,983.44	**102,949,987.53**
செயற்பாட்டுச் செலவினம்			
ஊழியர் சம்பளம்	15	51,135,231.18	47,805,665.75
பிரயாணச் செலவினம்	16	248,483.37	753,952.06
வழங்கல் சேவைகள்	17	1,077,432.46	962,770.61
பராமரிப்பு நடவடிக்கைகள்	18	2,414,594.23	1,981,631.57
ஒப்பந்த சேவைகள்	19	7,575,706.63	6,337,756.09
தேய்மானம்	20	7,337,317.89	8,385,431.14
பணிக்கொடை		2,536,868.50	1,685,095.00
அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான செலவினம்	21	11,188,773.24	10,268,351.52
பெண் தொழில்முயற்சியாளர் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தொழில்முயற்சிசார் கிராமம் நிகழ்ச்சித்திட்டம்	22	15,029,606.62	12,684,113.50
வேறு செலவினம்	23	7,011,542.81	12,799,256.35
		105,555,556.93	103,664,023.59
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான மிகை / (குறை)		(12,256,573.49)	(714,036.06)
கட்டிடம் அகற்றல்		(2,082,814.92)	
		(14,339,388.41)	(714,036.06)
கூட்டுக			
பிற்போடப்பட்ட வருமானம்		7,337,317.89	8,385,431.14
நடைமுறை ஆண்டின் மிகை / (குறை)		**(7,002,070.52)**	**7,671,395.08**

2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று

	மூலதன கொடை ரூபா	திரண்ட நிதி ரூபா	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா	மொத்தத் தொகை ரூபா
2018.01.01 ஆம் திகதிக்கு மீதி	33,180,290.03	24,774,638.23	6,578,345.91	64,533,274.17
கணக்கீட்டு நியம மாற்றங்கள்	-	-	-	-
பிரதான தவறுகள்	-	-	-	-
பிற்போடப்பட்ட செலவினம்	(12,062,543.19)			(12,062,543.19)
தேய்மான ஒதுக்கம்	(7,337,317.89)			(7,337,317.89)
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்				
திறைசேறி கொடை - நிதி		-	-	
சொத்துக்கள்	46,312,000.00	-	-	46,312,000.00
நிதிச் செயலாற்றுகைக் கூற்று	-	-	-	-
செலாவணி மாற்ற வித்தியாசம்	-	-	-	-
காலப்பகுதிக்கான மிகை / (குறை)	-	(7,002,070.52)	-	(7,002,070.52)
2018.12.31 ஆம் திகதிக்கான மீதி	60,092,428.95	17,772,567.71	6,578,345.91	84,443,342.57

தேசிய வடிவமைப்பு நிலையம்
2018.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	2018		2017	
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்				
சாதாரண செயற்பாடுகளிலிருந்தான மிகை / குறை	(12,256,573.49)		(714,036.06)	
கூட்டுக – முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்	-			
குறைக்க – முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்	-	(12,256,573.49)		(714,036.06)
காசல்லாத மாற்றங்கள்				
தேய்மானம்	7,497,901.42		8,443,305.55	
கடந்த ஆண்டுக்கான தேய்மான சீராக்கல்	(15,930.00)			
பணிக்கொடை	2,536,868.50		1,685,095.00	
இறுதி இருப்பு மிகை / (குறை)	781,83601		(1,186,216.67)	
மிகை / (குறை) வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை	(8,504,210.47)		4,219,840.40	
மிகை / (குறை) பதவியணிக் கடன்	(2,952,624.16)		(1,311,860.70)	
முற்கொடுப்பனவு மிகை / (குறை)	84,297.86		47,328.81	
மிகை / (குறை) வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை	4,072,110.42		(464,584.91)	
யு.என்.டி.பி. நிகழ்ச்சித்திட்டத்திற்கு கிடைத்த தொகை	(2,718,665.95)		(1,668,522.00)	
பணிக்கொடை செலுத்தல்	(2,290,218.00)		(2,921,681.00)	
மிகை / (குறை) அட்டுறு செலவினம்	(183,477.66)	(1,692,112.03)	(147,206.12)	(1,744,182.44)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம்		(13,948,685.52)		(2,458,218.50)
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து பெற்ற காசோட்டம்				
